1269

உள் நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 3.

வெளி நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 4.

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ—ÉGALITÉ—FRATERNITÉ

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
Tamil Pandit
Jaffna
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichéry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. III. | புதுவை, தாது ௵ ஆவணி ௴ கஉ ௳ (27—8—36) | NO. 36;37.

## சுத்த சாதகம்

———

அன்னியதசையையருந்துதன்மனிதர்க்
கடாதுமற்றதையருந்திடுவோர்
அன்னியமிருகாதிகளேனவறைய
லாகுமற்றதிற்சிவாங்கிசரும்
அன்னியமாயாவுணவருந்திடுத
லடாதுமற்றதையருந்திடுவோர்
அன்னியமாயாசகிதசீவர்களேன்
றறைந்திடலாகுமென்றுணர்வாய்.

அசுத்தவிவ்வுணவேபுசித்திடுமளவு
மசுத்தவாதனையதுநீங்கி
அசுத்தவவத்தையினைவிழுங்கிடுஞ்சுத்த
வவத்தைவந்தடைதலேயிலையாம்
அசுத்தவிவ்வுணவைச்சுத்தமதாக
வகத்தினிற்பாவனைசெய்தால்
அசுத்தவிந்நினைவைநீங்கியந்நினைவை
யகத்தினிற்பொருந்தியேநிற்கும்.

1270

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]


# வித்தகம்

புதுவை

தாது ஹூ ஆவணிமீ கஉ உ


## ஒழிபு.

குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் வியாபகம் எனும் தீவினை நிறை எற்ற பெற்றி அடைந்தமையால் அந் நிறையைக் குறைக்கி நல்வினை நிறைக்கு ஒப்பக் கண்டு,

இரு வினையும் சமப்பட்டு அவற்றின் எற்றத் தாழ்ச்சியால் அலைவு செய்யும் பண்டைத் துன்பங்கள் ஒழிந்த இடமாகிய—வாய்மையான அறம் பொருள் இன்பங்கள் சித்திக்கப் பெற்றமையால் வீடு பேற்றைக் காட்டும் இடமாகிய

"ஒழிபு"

என்னும் நிலைமை கைகூடப் பெற்ற தடத்தை அடைந்து ஆரோகணம் பெற்று நித்தியத்துவம் அடைந்த தத்துவப் பெரியாராகிய இடைக்காடர் திருவாய் மலர்ந் தருளிய,

"மூவடி முப்பது"

என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் நான்காம் அத்தியாய மாகிய இறுதி அத்தியாயமாகி மிளிர்வது "ஒழிபு" என்பது.

இது தற்றுணை யாக்கம், பிணி, அழுகை, மூப்பு, சாக்காடு என்னும் ஐந்து சூக்தங்களாகிய ஐந்து பிரிவுகளை உடையது.

இம் மகுடங்களை விளக்கிக் கூறுமுன், ஒழிபு என்பதன் பெற்றி ஒரு சிறிது விளக்கிக் கூறப் படுதல் இன்றியமையாத தாகின்றது.

மூவடி முப்பது என்னும் இவ் அரு மறையில் பக்குவ சீவன் குருவருளால் கைக்கொண்டு ஒழுக வேண்டிய சாதனங்கள்

இன்பக் கூறு, பொருட் கூறு, அறக் கூறு, ஒழிபு

என நான்கு பகுதிகளாகக் கூறப் படினும்,

இவை யாவற்றுக்கும் அடிப் படையான இன்பக் கூறு முதலிய கந்தருவ வழக்கம் என்னும் களவொழுக்கப் பயில்வுகளை — நிறை முறையான சிற்றின்ப வாழ்வு என்னும் சிறு வாழ்வே நிவிர்த்தி நெறிக்கு இன்றியமையாச் சாதனமாகும்.

இவ் அரிய பெரிய ஒழுக்கமே நிறைகோல் என்னும் மைய முள்ளாகிய— மத்திய கத ஸ்தான மாகிய

"தூக்கம்"

என்னும் தடத்தை அடையச் செய்வது; ஆசைப் பேற்றை அடிப்படை யாக்குவது; இருவினை ஒப்பும் மல பரிபாகமும் சத்தி நிபாதமும் அடையச் செய்வது எனக.

இத் தடத்தையே வேதாகமாதி நூல்கள் — இருடிகள், முனிவர்கள், மெய் யடியார்கள், சித்தர்கள், ஆழ்வார்கள் எனப்படும் தத்துவப் பெரியார் அருளிய நூல்கள் சீவர்கள் பக்குவங்களுக்கு ஏற்பப் பலப்பல கற்பனைகளால் விதந்து கூறுவன வாகும்.

நடுவு நிலைமை என்னும் மத்திய கத ஸ்தான மாகிய இத் தடத்தை அடைந்தவன் எவனோ,

அவனே வாய்மையான அறம் பொருள் இன்பங்களை அடைந்தவன் ஆவன். பிரமசரியம், கிருகஸ்தம், வானப்ரஸ்தம், சன்னியாசம் என்னும் நான்கு நிலைகளை அடைந்தவனும் இவனே ஆவன்.

இன்பக் கூற்றின் பின் பொருட் கூறும் அதன்பின் அறக் கூறும் அதன்பின் ஒழிபும் சித்திக்கப் பெறும் என மூவடி முப்பதில் கூறப்பட் டிருப்பதாகப் பொருள் கோடல் தவறுடைத்தாம்.

சிற்றின்பம் என்னும் மாயா போகமே உலகத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நிகழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமானது என ஐந்து சூக்தங்களால் விளக்கி,

அஃது உலக மாக்களால் நிறை முறையோடு கையாளப் படாமையால் அன்னார் பிணி மூப்புக்களால் நலிவடைந்து சாதலடைதற்கே — வம்பு பழுத்து மாண்டு போதற்கே சாதனமாகின்றது எனத் தெளிவுறக் காட்டி,

நிறை முறையோடு கையாளப் பட்டுழி இச் சிற்றின்பமே பேரின்பமாகித் திரிதலடையும் எனவும் அறிவு

1271

றுத்தி,

பேரின்ப லாபம் பெறுதற்கு இஃதன்றி வேறு தடம் இல்லை எனவும்,

இத் தகைய குரு நெறி உலக மாக்கள் கண்கூடாக் கண்ட நெறி கட்கு மாறுபட்டது ஆதலால்,

அன்ன நெறி யல்லா நெறிகளால் சாதலடையும் அவ் உலக மாக்கள் இதனைப் பொய்யுரை என எள்ளனஞ் செய்து புறக்கணிப்பார் எனவும்,

பக்குவ சீவரே குருவருளால் இவ் அறத்தாற்றைக் கடைப் பிடித்து ஒழுகுவார் எனவும்,

ஆதலால் அத் தகைய பக்குவ சீவர் உலக வசைகட்கு நாணாது தமது முயர்சியில் சோர்வடைந்து அவரோ கணம் பெறாது மதி வைராக்கியத் தோடு படி யேற்றம் பெறவேண்டும் எனவும்,

பேரின்பம் என்னும் பிரமக் கிழத்தி யாகிய காமக் கிழத்தியை அடைதலே —காமாட்சி பீடத்தை அடைதலே— ஆசைப் பேற்றை அடிப்படை ஆக்கு தலே நிறை முறையான சிற்றின்ப நுகர்ச்சியால் — வாய்மையான கற்றல் என்னும் கல்வியால் ஆம் பயன் எனவும் “இன்பக் கூறு” “பொருட் கூறு” என்னும் அததியாயங்களால் கூறி யருளினர் புலவர்.

பேரின்பப் பேறே பொருட் பேறும் அறப் பேறும் ஆம்.

அசுத்த காம நுகர்ச்சியால் காதல் என்னும் தூய காமம் கைவரப் பெறு தலே—பேரின்ப லாபமே பொருட் பேறும் அறப் பேறுமாம் என்பது பின் வரும் பிரமாணததானும் வெள் ளிடை ஆம்.

## தொல்காப்பியம்.

———

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

(ஷை பொருள்—கற்பியல்.)

“காமம் சான்ற கடைக் கோட் காலை”

என்பது மையல் என்னும் அசுத்த காமமானது தூய காமம் என்னும் காதற் காமமாக—சிற்றின்பம் பேரின்ப மாக மாற்ற மடையப் பெற்றமையை உணர்த்திற்று.

“ஏமம் சான்ற மக்களோடு துவன்றி”

என்பது பொருட் பேற்றை உணர்த் திற்று.

“அறம் புரி சுற்றம்”

என்பது அறப் பேற்றை உணர்த் திற்று.

இச் சூத்திரப் பொருள் “வித்தகம்” தொகுதி 3 இல. 13 இல் “இன்பக் கூறு” என்னும் கட்டுரையில் நன்று விளக்கிக் கூறப் பட்டது. ஆங்குக் காண்க.

மேலே கூறிய புறப் பயில்வாகிய சிற்றின்ப நுகர்ச்சியால் கிழவனும் கிழத்தியும் (உயிரும் ஊனும்) ஒன்று றக் கூடிக் குழைந்து அச் குழைவு என்னும் பஞ்சீகரணிப்பால் அவை இரண்டு எனப் படாது ஒன்றே என ஆக்கப் பட்டதால் — ஒன்றே என அமைந்த நேரா நட்பினால் அமலமாக — ஏமமாக — முன்னிலைகள் அனைத் தையும் பொன்னாக மாற்றுதற் குரிய குரு எனத் திரிதலே — காய சித்தி பெறுதலே பொருட் பேறு என,

அப் பொருட் பேற்றை அடைதற் குரிய படியேற்ற முறைகளையும் அப் பொருட் பேற்றின் பயனையும் பொருட் கூறு என்னும் அத்தியாயத்தில் பத்துச் சூத்தங்களினால் கூறி யருளினர்.

அறக் கூறு என்னும் அத்தியா யத்தில், உரிய சாதகங்களால் விந்து தூய்மை அடைதலால்,

அதன்கண் ஆக்கமுற்ற நாதங்கள் தங்கள் பிறப்பிடமாகிய அவ் விந்து வில் உறைந்து அதனோடு பிருதிவி அம்சமாகிய உடலகத்து உறைந்து,

“குடி”

என்னும் அருளமுதம் ஆகி மரணம் என்னும் தொழு நோயைத் துடைத் தலால்,

“அறம்”

என்னும் நித்தியத்துவம் கைவரப் பெற்றமையை அப் பெற்றி கைவரு தற்கண் உளதாகும் நிகழ்ச்சிகளோடு பத்துச் சூக்தங்களால் கூறி யருளினர்.

இவ் வாற்றால், நிறை முறையான சிற்றின்பப் பயில்வே — சிறு வாழ்வே நிறை கொள்ளக் கொள்ள,

படி முறையான் ஆக்க முறும் பக்குவ நிறையை ஒவ்வொர் சூக்தங் களால் காட்டி,

இப் பயில்வுகளாற்றான் வாய்மை யான இன்பமும் பொருளும் அறனும் சித்திக்கும் என்பதனை வலியுறுத்தி, ஈற்றில்

“ஒழிபு”

என்னும் அத்தியாயத்தால் இம் மூன்றும் கைகூடப் பெற்ற தடமாகிய —பாசங்கள் பற்றுக்கள் ஒழியப் பெற்ற இடமாகிய ஒழிந்த இடத்தைக் குறிப் பிட்டனர் ஆசிரியர் என அறிதற் பாற்று.

“பொருட் கூறு” என்னும் அத்தி யாயத்தில் “ஆசை” என்னும் சூக்தத் தால் சுருங்க உரைக்கப் பட்ட உண்மையையே “ஒழிபு” என்னும் சொல் விளக்கிக் காட்டுவதோடு.

அவ் ஆசைப் பேறு அடிப்படை

ஆக்கப்பட்ட பின் அதற்கு மேல் நடை பெறும் ஆரோகணப் பெற்றியையும் குறிப்பால் உணர்த்தி மிளிர்கின்றது எனவும் கூற ஆம்.

குரு நெறி வழுவாது கடைப் பிடித்து ஒழுகி இருவினையைச் சமம் செய்த பக்குவ சீவனால் அடையப் படவேண்டிய தடம் இதுவே ஆம்.

## திருவாசகம்.

———

ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின இருவினை
[யறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவ
[னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
[பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புத
[மறியனே.

என இந் நிலை கைவரப் பெற்ற மணிவாசகப் பெருமான் அருளியதும் அறிக.

இது தான் ஒழிபு—ஒழிந்த இடம்—விடுதலையான இடம். அஃதாவது வீடு பேற்றைக் காட்டும் இடம்—வழங்கும் இடம் என்பது பொருளாம்.

இதுவே வியாபகம் எனும் தீவினை நிறை ஏற்ற பெற்றி அடைந்திருந்தமையால் அந் நிறையைச் சிதைத்து—குறுக்கி நல்வினை நிறைக்கு ஒப்பக் கண்ட இடம்;

இரு வினையும் சமம் பெற்ற இடம்;

தன் மாத்திரைகளை—தன் நிறைகளை—தனது சரீர பௌதிகங்களின் மாத்திரை நிறைகளைக் கண்ட இடம்;

தன்னை அறிந்த இடம்;

ஆதலால் முன்னிலை என்னும் ஆசானும் ஆசானால் பணிக்கப் படும் விதி விலக்குக்களும் ஒழிந்த இடம்;

ஆசான் மாணவன் என்னும் பேத நிலைமை இன்றி இருவரும் சமம் பெற்ற இடம்;

கன்றும் ஆவும் பூத்த இடம்;

கன்றாப்பூர் நடு தறி என்க.

## அப்பர் தேவாரம்.

———

மாதினையோர்கூறுகந்தாய்
[மறைகொள்நாவா
மதிசூடிவானவர்கடங்கட்கெல்லாம்
நாதனேயென்றென்றுபரவிநாளு
நைந்துருகிவஞ்சகமற்றன்புகூர்ந்து
வாதனையான்முப்பொழுதும்பூநீர்கொண்டு
வைகல்மறவாதுவாழ்த்தியேத்திக்
காதன்மையால்தொழுமடியார்நெஞ்சி
[னுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே.
(ஷை திருக்கன்றாப்பூர்—திருத்தாண்டகம்—
[செ. 1)

என அப்பர் பெருமான் அருளியதும் அறிக.

[“பூ நீர் கொண்டு..........வாழ்த்தி ஏத்தல்” என்பது விந்து அமலமடைந்து உடலில் உறைதலால் உளதாகும் வாய்மையான சிவ வழிபாட்டை—சிவோகம் கைகூடப் பெற்றமையை உணர்த்தி நின்றது.

“காதன்மை” என்பது நிறை முறையான சிற்றின்ப நுகர்ச்சியால் அசுத்த காமம் தூய காமமாக மாற்ற மடைந்தமையால் காதல் என்னும் கந்தழி கைவரப் பெற்றமையை உணர்த்தி நின்றது.]

இருவினை ஏற்றத் தாழ்வால் ஆக்க முற்று அலைக்கும் துன்பங்கள் ஒழிந்த இடம் இதுவே.

“இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை”

என்றனர் இந் நிலை கைவரப் பெற்று நித்தியத்துவம் அடைந்த நமது அப்பர். (ஷை தேவாரம்)

முன்னிலைகளின் நிறை அனைத்தும் பலபல என்று உதிர்ந்து காட்டும் இடம் இதுவே.

தானாகவே யாவற்றையும் அறிந்து நடக்கும் இடம்—நடத்தும் இடம் இதுவே.

முன்னிலைகளின் பெட்பை வாய்மையாக உணர்ந்து ஒழுகுதற் குரிய பகுப்புணர்வு பெற்ற இடம் இதுவே.

பஞ்ச பூதங்களையும் அநுபவிக்கும் இடம் இதுவே.

தன்னிலை முன்னிலை என்னும் பேத பாவனை ஒழிந்து ஆண்டான் என்றும் அடிமை என்றும் பிரித்துப் பேசப் படாத இடம் இதுவே.

சகல ஆசைகளும் எவ் வகையான துன்பமும் இன்றி அஃதாவது முயற்சி இன்றி பூரணப்படும் இடம் இதுவே.

## திருவாசகம்.

———

“துறைவிலா நிறைவே கோதிலா அமுதே
..............................................
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்இரக் கேனே..,
(ஷை கோயிற்றிருப்பதிகம் செ. 5)

என அருளிச் செய்தார் இத் தகைய தடத்தை அடையப் பெறுதலால் வேண்டியன யாவும் கைகூடப் பெற்ற மணி வாசகப் பிரபு.

## கருவூர்த் தேவர் திருவிசைப்பா.

———

அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டே
அன்பொடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறும்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதத்துவையும்பைம்பொன்மாளி
[கையும்
பவளவாயவர்பணைமுலையும்
கற்பகப்பொழிலுமுழுதுமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே.
(ஷை கங்கைகொண்டசோளேச்சரம் செ. 3)

என அருளிச்செய்தார் இத் தகைய சிவாநுபவப் பெற்றி கைவரப் பெற்ற கருவூர்ச் சித்தர்.

தானே தானாய் இயங்கும் இடம் இதுவே.

தான் அவன் ஆகும் வாய்மையான சமாதி கூடும் இடம் இதுவே.

### திருமந்திரம்.

—————

தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்
ஆன மலமறு மப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காய மிருக்கு மிருநிலத்(து)
ஊனங்க ளெட்டு மொழித்தொன்று வோர்
[கட்கே.

(ஷை 8-ம் தந். நின்மலாவத்தை செ. 17)

இத் தடத்தை அடைந்தவரே மும்மலமும் ஒழியப் பெறுவோர்; சீவத்துவம் நீங்கப் பெறுவோர். இவரே ஈனமில் காயத்தோடு நித்தியத்துவம் பெறுபவர்;

பிறப்பு வளர்ச்சி, பசி; பிணி, நரை, திரை, மூப்பு, சாக்காடு என்னும் ஊனங்கள்—ஊன் சம்பந்தமான உபாதிகள் ஒழிந்து ஒன்றுவோர்;

பரத்தில் பரமாகிய ஞானாகாசத்தில் ஒடுங்குவோர் என அறிக.

இம் மந்திரத்தின் விளக்கமான உரையை முன்னே வெளி வந்த "வித்தக" இதழ்களில் கண்டு தெளிக.

ஒழிந்த இடமாகிய இவ் இடமே சமம் பெற்ற நல்வினை தீவினை நிறையை அறிந்து அளவோடு உண்டு உண்டு அமலத்தின் ஆக்கம் எற்ற பெற்றி அடையும் இடமாகும்.

அமல களங்கம் என்னும் மதியின் இடம் இதுவே.

மதியாகிய பதி பதியாகிய ஆசான் குண்டலி என்னும் மாயையைத் தன் வசமாக்கி அடிமை கொண்டமையால் அக் குண்டலி என்னும் ஆடரவை ஆபரணமாகப் பூண்ட இடம் — வசப்படுத்திய இடம் – அடிமை யாக்கிய இடம் இதுவே.

இக் காலத்தில் இயற்கை யாகவே கீழ் முகம் நோக்கிய குண்டலி மேல் முகம் நோக்கி நிற்கும்.

புண்ணியனாகிய மதி தன் பிரகாசத்தால் குண்டலி என்னும் மாயையாகிய இருளை அரிப்பதே அடிமை யாக்குவது என்பதன் பொருளாகும்.

இங்ஙன் பகல் இரவு அற்று இருவினை யாகிய உஷ்ண சீதளம் சமரசமாய் விளங்கும் என அறிக.

இப் பெற்றி கைவரப் பெறுதலே சீவன்முத்தி நிலையாகும்.

மேலே கூறிய தடத்தை அடைந்தவரே சத்துவத்தில் ரசோகுணம் தீண்டுதலால் மாறி மாறி வரும் தத்துவத்தை நீக்குபவர்.

சதமாய் நிற்பது எனப் பொருள் படும் சதா சிவப் பேறு அடைபவர் இவரே.

குரு சொரூபம் பெறுபவர் இவரே,

இவ் விடமே ரக்ஷிக்கும் குருவின் இடம்.

சமரச ஆதிக்கமான இவ்விடமே குருவின் இடம்—குரு பீடம் என்க.

இப் பெற்றி கைவரப் பெற்றவரே உலக குரவராய் வதிந்து பக்குவர்களுக்கு அருள் புரிபவர்.

முடிந்த இடம் –முடிவான இடம் —ஒழிந்த இடம் இதுவே.

இவ் விடத்தையே "ஒழிபு" என்றனர். இவ் விடத்தை அடைந்தோர்க்குரிய பண்பையே—செயலையே—ஆரோகணப் பெற்றியையே இவ் அத்தியாயத்துள்ள ஐந்து சூக்தங்களால் விளக்கியருளினர் எமது இடைக்காடர் பெருமான் என அறிக.

இக் தடத்தை ஒழிந்த இடம் —ஒழிபு என்றால் இதற்கு மேல் ஒன்றும் இல்லையோ? எனின், இதற்கு மேல் பேசுப வரும் கேட்பவரும் இல்லை என அறிக.

ஆசைப் பேறு அடிப்படை யாகப் பெற்றமையால் வேட்கை என்னும் அவா ஒழிந்த இடம் இதுவேஆதலால்,

இதற்கு அப்பால் சுருதி இல்லை சுருதி யாகிய முன்னிலை இல்லை. ஆசானாகிய வேதம் வேதமாகிய நாதம் இல்லை. இதுவே வேத அந்தமாகிய நாத அந்தம்; சுருதி முடிந்த இடம்.

சுருதி முடிந்த இடமாகிய இவ் விடத்தை அணவியவரே சோம்பர்.

அஃதாவது சிவச் செயலாகிய அசுத்தமான முயற்சி அற்றவர்; தற் சுதந்திரம் ஒழிந்தவர் என்பது. இவரே சகச நிட்டை யாளர்.

நாத அந்தமாகிய வாய்மையான சுருதி என்னும் சாம கானத்தைத் தம்முள்ளே கேட்டு —உணர்ந்து —அருளமுதம் உண்டு பேரின்ப நிட்டையாகிய சகச நிட்டையில் இருப்பவர் இவரே ஆவர்.

### திருமந்திரம்

—————

சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுந்த ஒளியிலே
சோம்ப ருணர்வு சுருதிமுடிந்திடம்
சோபர்கண் டாரச் சுருதிக்கட்டேக்மே.

(ஷை 1-ம்தந். உபதேசம் செ16)

தூங்கிக்கண் டார்சிவ லேகமும்தம்முள்ளே
தூங்கிக்கண்டார்சிவ யோகமுந்தம்முள்ளே
தூங்கிக்கண்டார்சிவ போகமுந்தம்முள்ளே
தூங்கிக் கண்டார்நிலைசொல்வதெவ் வாறே.

(ஷைஷை செ.17)

என்னும் அண்ணல் திருமூலர் அருள் வாக்குக்களையும் நோக்குக.

### சுத்தசாதகம்.

சகசநிட்டையதுவபிக்திடுங்காலேத்
தம்முயறசியமதொன்றமின்றிச்
சகசமதாககூடன்னுள் மதனிற்றனின்
றங்கிடைவிடாதுறும்
சுகவுருளமுதமதனையேயருந்தித்
தொல்வடிவதுமெள்ளக்கரைந்து
சுகவுருள்வடிவாய்ச்சுடரெலாம்
அருளாய்த்தோன்றநின்றிடு
[நின்றபடியே.

(ஷை செ 63)

"ஒழிபு" என்னும் இத் தடமே பேச்சு அற்ற இடம்—சிவனைப் பாழ் படுத்துப் மூச்சு அற்ற இடம் — ஒடுங் கிய இடம் என்க.

மூச்சு மூச்சு என்னும் வாயு எவ் வாறு அற்றது?

பிருதிவி அம்சமாகிய ஊனில் உறை யப் பெற்றமையால் — ஒடுங்கப் பெற்ற மையால் அற்றது எனக.

### ஞான சம்பந்தர் தேவாரம்.

"ஊனில்உயிர்ப்பைஒடுக்கிஒண்சுடர்
ஞானவிளக்கினைஏற்றி........................
....................................................."

என அருளிச்செய்தார் ஞானசம்பந்தர்.

சுத்த வெளியில் இருக்கும் இத் தகைய தத்துவப் பெரியார மெய் யக த்து அமல ஒளி வடிவினனாகிய ஐயனை புகுந்து கோயில் கொள்வதால் அப்பால் பேச்சு இல்லை என்க.

### சிவவாக்கியர் பாடல்.

ஐயன்வந்துமெய்யகம்புகுந்தவா
[றதெங்ஙனே
செய்யதெங்கிளங்குரும்பை
[நீர்புகுந்தவண்ணமே
ஐயன்வந்துமெய்யகம்புகுந்து
கோயில்கொண்டபின்
வையகத்துமாந்தர்முன்புவாய்
[திறப்பதில்லையே.

ஆசான் மாணவன் என்னும் இரண்டு தத்துவங்களும் ஒன்றான இடம் இதுவே ஆதலால், பேசுவோரும் இல்லை. கேட்போரும் இல்லை.

வேதம், ஆகமம், புராணம் முதலிய நூல்கள் எல்லாம் இத் தடத்தை அடைதற்குரிய பொதுவான சாதனங் களையும் பிறவற்றையும் பற்பல உருவ ங்களாகிய கற்பனைகளால் கூறி, குரு வருளால் இத் தடத்தை அடைய வேண்டும் என வற்புறுத்துவன வாகும்.

அன்றி, இவ் உயரிய நிலைக்கு அப் பால் உள்ள நிகழ்ச்சிகளைக் கூறுவதி ல்லை.-கூற முடியாது என்பது.

> விநாயக சதுர்த்தியை முன்னிட்டு சென்றவாரம் எமது பத்திரிகை வெளிவர வில்லை.
>
> [ப-ர்]

இவ்வாறே முத்தி நிலையையும் இந் நூல்கள் குறிப்பாகவே கூறும்.

குரு வருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் "ஆக்கையின் உறு பொ ருள்" ஆய் உடலகத்து ஆக்க முற்ற அகண்டாகார அமல சொரூபம் தன்னை விழுங்கி — உடலுயிரை விழுங் கித் தானாகச் செய்து விடுதலாகிய நிலை ஒன்று உள்ளது.

இதனையே வேதாகமங்கள் "ஜோதி" "ஜோதி" என முழங்கா நிற்கும்.

அப்பால் ஞானாகாசத்தில் மறைதல் சொல்லாமலே அமையும். அதனை வெளிப் படையாகக் கூறுவார் இல்லை' கூறுவதும் இல்லை, கூறுதற் குரிய ஆற்றலும் இல்லை. சிவோபாதி ஒழிந்து தற்சுதந்தரம் அற்று சும்மா இருத்தலினால் என்க.

சும்மா யிருத்தல் சுளுவென்று தள்ளாதே
அம்மா அருமையாம் யார்க்குமே-நம்மாலோ
நிற்கறதாம் அந்நிலையில் நின்றால் நிகரில்லை
தற்போத சாந்தமது தான்.

என்பது ஆன்றோர் வாக்கு.

மேலே கூறிய "ஒழிபு" என்னும் நிலைமை கைவரப்பெற்ற இடமே மனமும் மதியாகிய பதியும் ஒன்றப் பெற்ற இடமாதலால் — உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிய இடமா தலால்,

இவ்விடத்தை அடைந்த மெய்படி யாரே சீவத்துவம் நீங்கப் பெற்றவர்; மனதாலும் ஐம் பொறிகளாலும் நேரும் துன்பங்கள் நீங்கப் பெற்றவர்; அசுத்தமான அவா ஒழியப் பெற்றவர்.

அறு வகைப் பகைகளும் நட்பான இடம் — சாந்தியான இடம் — தணிந்த இடம் இதுவே.

யாவும் தணியப் பெற்ற — ஒழியப் பெற்ற தடம் — மலை இதுவே.

பேரின்பம் அருளும் மலை — "இன்பருள் முத்தி யருளுமலை" இதுவே ஆம்.

மனம் என்னும் அசுரனால்-சூரனால் நேரும் செருவும் ஐம்புல வேடரால் நேரும் செருவும் தணிந்த இடம் —சாந்தி பெற்ற இடம் இதுவே.

இவ் விடத்தை அடைந்தவர் வேதன் மாலினும் விழுமியோர்; யாவற்றினும் மேலானோர்.

இதனையே செருத்தணி" என்பது கந்தப் புராணம். அகிலத் துள்ள ஓர் மலையை — ஆலயத்தை செருத்தணி என்பது — தணிகாசலம் — தணிகை என்பது இடுகுறி வழக்காகிய போலி வழக்கே ஆம்.

பின் வரும் செய்யுள் தணிகை என் னும் தத்துவ இயல்பை — ஒழிபு என்

(8-ம் பக்கம் பார்க்க)

# உடலுயிர்ச்சம்பந்தம்

(தொகுதி 3. 42-ம் வாரத் தொடர்ச்சி.)

பௌதிகங்கள் இன்ன இன்ன நிறையோடு பொலிந்தால் உடல் உயிர் என அமையும் என்ப.

நிறையே ஒலி. ஒலியே வேதம். இயக்கமும் அதுவே.

"ம்" என்னும் கௌண இயக்கம் "ம" எனப் பூத்தால் உயிர் உலகு தோன்றும்.

உடலுயிர்களில் எது முந்தியது எது பிந்தியது என்று மொழிதல் ஆகாது. மொழிதல் முடியாது. இவற்றால் உடலுயிர் பிரிபடா என்பதும் அவை இருவினை சொரூபமே என்பதும் ஒருவாறு விளக்கப்பட்டன.

உடலுயிர்களின் அந்நியோந்நிய சம்பந்தத்தை அறியாமையே உடல் செத்துப் பிணமானபின் உயிர் பூரணத்துவம் அடையும் — முத்தியடையும் — கடவுளோடு இரண்டறக் கலந்துவிடும் என்னும் போலிக் கொள்கை ஆக்கமுறுதற்குக் காரணமாயிற்று.

உடலுயிர் பிரிபடா திருப்பதே தலை நட்பாகும். தலை நட்பாளரே விஞ்ஞானகலராவர். தலை நட்பாளர் தமது தூலத்தை அரூப சொரூபமாய் விளக்கத் தக்க ஞான முடையராய்க் கர்மத்தால் கர்மத்தை ஒழிப்பர்; தமது தூலம் கீழே பிணமாக விழாமல் அநித்திய நிறையாகிய சாதல் நிறையை அழித்து, கால அளவு கடந்த நித்திய நிறையைப் பெறுவர். இதுவே சதா சிவப் பேறு.

"நந்தியருளால் சதா சிவனாயினேன்
நந்தியருளாலே நானிருந்தேனே."

என எம் மண்ணல் திருமூலர் கூறியதும் அறிக.

காலனைக் காலால் உதைத்த இடம் — வென்ற இடம் இதுவே யாகும். இவர் "தான் அவன் ஆகும் சமாதி" கை கூடி "ஈனமில் காயம்" ஆகிய ஓ வடிவம் பெற்றுச் சீவன் முத்தராய்ச் சில காலம் உலகில் வதிந்தோ உடனேயோ அவ் ஓ வடிவமும் கரைந்து உலகு கண்டு போற்ற மறைந்து உண்மைச் சைவ முத்தியடைவர்.

சதா சிவ வடிவமே குரு சொரூபம். குரு வேறு சதாசிவம் வேறன்று. தேகம் வேறு சீவன் வேறன்று. உபயமும் கூடியது சொரூபமாகும். சத்தாகிய மெய்யும் சித்தாகிய உயிரும் வேறு வேறு எனத் துவித பாவனை பண்ணுவதே அசுத்த மாயை யாகும்.

தேக சீவ சொரூபம் ஒன்றே என உணராதவரை—அநுபவமாக அறியாதவரை பகிர் முகம் அறாது. அஃதாவது முன்னிலைச் சுட்டு ஒழியாது என்பது.

முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்தலாலன்றி வேறு எவ்வாற்றானும் உய்தியடைதலும் வீடு பேறடைதலும் முடியாவாம்.

நந்தியாகிய குரு நாதன் திருவடி என்னும் அமல ஐகாரத்தில் ஒவ்வொரு காரம் இன்ன இன்ன நிறையெனப் பிரிந்து வியாபகம் பெற்ற நிறையே ஆன்மா.

ஐகாரம் வியாப்பியம் ஆன்மா வியாபகம். வியாபகம் மித்தை. வியாபகமே காரியம். வியாப்பியம் காரணம்.

வியாபகத்தில் வியாபகமாய் விளங்குவது அஃதாவது காரியத்தில் காரியமாய் விளங்குவது தூலமாகிய சிவை—பாசம்.

மித்தையாகக் கண்டதை-அநித்தியமானதை நிறையோடு பஞ்சீகரணித்தே நித்தியமாக்க வேண்டும்.

மாயைப் பொருள்களை அவற்றோடு கூடி நின்றே உறவு படுத்தி வெல்லுதல் வேண்டும். அன்றி மாயையை மித்தை என்று வெறுத்து ஒதுக்குவதால் அதனை வென்று நித்தியத்துவம் அடைதல் முடியாது.

இவ் வுண்மையை-வேத உண்மையை அறியாதார் பலர், உடலுயிர்ச் சம்பந்தத்தை உணராது,

'உலகம் மித்தை. தோன்றியவெல்லாம் அழிவுடையனவே. மாயை அநிர்வசனீயம். மாயை பொல்லாது. மாயை என்னும் பெண் பொல்லாது. சரீரம் பொல்லாது. மண் பெண் பொன் இம் மூன்றையும் அகற்றல் வேண்டும். பற்று அறல்வேண்டும். இவை சதமல்ல. இவற்றை நம்புதல் கூடாது. நம்பினால் மோசம். பெண் கொள்ளல் ஆகாது. நூறு ஆண்டளவும் ஒருவன் பேய் கொண்டாலும் பெண் கொள்ளல் ஆகாது. முன்னிலைகளை வெறுத்து ஒருபால் ஒதுங்கல் வேண்டும். இறப்பது சத்தியம்."

என்று இன்னோரன்ன உண்மைகளை — போலி உண்மைகளை வெளிப்படுத்தி, தாம் சொல்லிக் கொண்டு திரிந்தது போலவும் தாம் எழுதி வெளியிட்ட கொள்கைளுகக்கு இலக்கியமாகவும் வதிந்து கடை நட்பாளராய்ச் செத்துப் போயினர்.

இக்கடை நட்பாளர் மித்தையாகக் கண்டதை நித்தியமாக்க வேண்டும்

என்பதை அறிய முடியாமல்- -அறியும் புண்ணியம் இல்லாமல், "சர்வம் பிரம மயம்" என்பதன் உண்மையையும் அறிய முடியாமல் மாண்டு பிறவி வலைப்படுவாராயினர் என்று கூற வேண்டியதே முறை யாகின்றது. இவை மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் உடலுயிர்ச் சம்பந்தம் கடை யிடை தலை என மூவகைப்படும் என்பதும்,

அவற்றின் இலக்கணங்களும் உடலுயிர் பிரிபடா என்பதும்,

முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால்— உறவு படுத்தலால் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி அள்ளூறாக்கையாய்ச் சூக்குமமாய்க் காரணத்தில் ஒடுங்குதலே உண்மைச் சைவ முத்தி நிலை என்பதும் ஒருவாறு உணரப்படும்.

உடலுயிர்ச் சம்பந்தம் முற்றிற்று.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் உயரிய நிலைமை நன்று புலப் படுத்துதல் காண்க.

## கந்தப்புராணம்.

செங்கண்வெய்யசூர்ச்செருத்தோ [ழினுஞ்சிலைவேடர்
தங்களிற்செறுஞ்செருத்தொழி [லுந்தணந்திட்டே
இங்குவந்துநாமிருத்தலாற்செருத்தணி [என்றோர்
மங்கலந்தருபெயரினைப்பெற்ற [திவ்வரையே.

பாதகம்பலசெய்பவராயினும்பவங்கள்
ஏதும்வைகலும்புரிபவராயினும்மப்பால்
ஆதரங்கொடுதணிகைவெற்படை [வரேலவரே
வேதன்மாலினுவிழுமியர்எவற்றினுமிக்கார்.

(ஷை வள்ளியம்மை திருமணப்படலம்)

கற்பனை வடிவமான இவ் உண்மை குரு மூர்த்தியாகிய முருகவேள் கூறியருளியதாகக் கந்த புராணத்துக் காணப் படுகிறது.

ஸ்காந்த மஹா புராணம் பதினென் புராணங்களுள் ஒன்றாகும்.

இஃது அரிய பெரிய வேத உண்மைகளையே சீவர்கள் பக்குவத்து ஏற்ற வாறு நிறை முறையான கற்பனைகளால் கூறுவதாகும்.

கற்பனைகள் வாயிலாக உண்மை உணர்ந்து ஒழுகுதலே உய்யுந்திறனாகும். மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் நான்காம் அத்தியாய மகிப "ஒழிபு" என்பதன் பெற்றி ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

## உப்பு.

(தொகுதி 3 20-ம் வாரத் தொடர்ச்சி)

உப்பு உயிர்களுக்கு மிகவும் அவசிமானது. நமது இரத்தத்திலும் தசையிலும் உப்பு இருக்கிறது. உப்பின் அளவு குறைந்தால், இவைகளின் வலுக் குன்றும். உப்பு தேகத்திற்கு ஒருவிதப் புஷ்டியை யளிக்கின்றது. ஊறுகாய் முதலியவைகளைச் சுத்தமாய்க் காப்பாற்றுவது உப்புத்தான். முற்காலத்தில் ரோமாபுரி யுத்தவீரர்கள்,தங்கள் வேதனத்தின் ஒரு பகுதியை உப்பாகப் பெற்றுக் கொண்டார்களாம். இவ்வஸ்து மிகவும் இன்றியமையாதது என்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அநேக நாடுகளில் சிற்சில பழக்க வழக்கங்களும் நீதி மொழிகளும் உப்பை ஒட்டியனவாக இருக்கின்றன. "உப்பிட்டவர்களை உள்ளளவும் நினை" என்பது தமிழ் முதுமொழி.

அரேபியர்கள், தங்களுடன் உப்பு உண்டவர்களை விரோதியாகக் கருத மாட்டார்களாம். முற்காலத்தில் மேல் நாடுகளில், சாப்பாட்டு நேரங்களில், பிரபுக்களும் அவர் குடும்பத்தவர்களும் ஒரு புறமாக உட்காருவார்களாம். வேலையாட்கள் கீழே இன்னொரு புறமாக உட்காருவார்களாம். இருவருக்கும் ஊடே உப்பு வைக்கப் பட்டிருக்குமாம்.

முற்காலத்தில் உப்பு உணவுப் பொருளாகமட்டும் கருதப்பட்டு வந்தது. இந்நாளிலோ உப்பின் உபயோகம் பலபடியாக இருக்கின்றது. மற்றைய சில உப்புக்களுக்குத் தாய்ச் சரக்காக உபயோகிக்கப்படுகின்றது. சோடா உப்பு, ஸோடியம் ஸல்பேட்,சவுக்காரம், கண்ணாடி முதலியவைகள் உப்பிலிருந்து செய்யப் படுகின்றன. ஆகவே, உப்பு ஏராளமாகத் தேவையாக விருக்கின்து.

இயற்கையிலேயே உப்பு ஏராளமாய் அகப்படுகின்றது. முக்கியமாகக் கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கப்படுகின்றது. கடற்கரை யோரத்தில் பாத்திகள் பிடித்து, அவைகளில் கடல் நீரை தேக்குகிறார்கள். அந் நீர் சூரிய வெப்பத்தால் காய்ச்சப்படுகிறது. தண்ணீரெல்லாம் ஆவியாக மாறவே, உப்பானது கீழே தங்கி விடுகிறது. இவ்வாறு எடுக்கும் கடல் உப்பு இக்காலத்துக்கு தேவைக்கு போதியதாகவில்லை. ஆதலால் பூமியில் பல பாகங்களில் சுரங்கங்களி லிருக்கும் உப்பை வெட்டியெடுக்கிறார்கள். மத்திய ஐரோப்பா கலீஷியா, இங்கிலாந்திலுள்ள செஷேர் முதலிய இடங்கள், அமெரிக்காவில் ஓஹியோ மாகாணம் முதலிய பிரதேசங்கள், ஆகிய இவை உப்புச் சுரங்கங்களுக்குப்பெயர்பெற்றவைஸால்ட் லேக்ஸிட்டி என்ற இடத்திற்கு அருகிலுள்ள பிரதேசங்களில் பூமியைஉழுது உப்புக் கட்டிகளை எடுக்கிறார்கள். கலீஷியாவிலுள்ள உப்புச் சுரங்கத்திலே சென்ற 600 வருஷங்களாக உப்புத் தோண்டி எடுக்கப்பட்டு வருகின்றது. அந்தச் சுரங்கத்தில் உப்புக் கல்லால் அநேக அறைகளும், காலரிகளும் செய்யப் பட்டிருக்கின்றனவாம். உள்ளெல்லாம் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றனவாம்.

[கலைமகள்]

Imprimerie "VITTAGAM' — Pondichéry. Le Directeur-Gérant. R. Nagarattinam.